# QB365 Question Bank Software Study Material

## வங்கியியல் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) வணிக வங்கிகள் என்பதை வரையறு.

**பதில் :** 1. வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, பேரளவில் உற்பத்தி செய்வோர், பெரிய நிறுவனங்களுக்கும், நடுத்தர நிறுவனங்களுக்கும் கடனை அளிக்கும் ஒரு நிதி அமைப்பு ஆகும்.
2. நீர்மைத் தன்மையைத் தக்கவைக்கும் பொருட்டு வணிக வங்கிகள் பெரும்பாலும் நீண்டகாலக் கடன்களை அளிப்பதில்லை.

2) கடன் உருவாக்கம் என்றால் என்ன?

**பதில் :** 1. கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல்.
2. மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.

3) மைய வங்கி என்பதனை வரையறு.

**பதில் :** 1. மைய வங்கி, ரிசர்வ் வங்கி அல்லது பணவியல் அதிகார அமைப்பு என்பது அரசின் பணம், பண அளிப்பு, வட்டிவிகிதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யும் ஒரு நிறுவனம் ஆகும்.
2. மேலும், நாட்டிலுள்ள வணிக வங்கிகளை மேற்பார்வையிடுவதும் இதன் பணியாகும்.

4) CRR மற்றும் SLR ஆகியவற்றின் வேறுபடுத்துக

**பதில் :**

| ரொக்க இருப்பு விகிதம் - CRR | சட்டப்படியான நீர்மை விகிதம் - SLR |
|---|---|
| வணிக வங்கிகளிடம் வந்து சேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளிலும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மைய வங்கியில் இருப்பாக வைக்க வேண்டும். | சட்டப் படியான விகிதமான இதில், வங்கிகள், தன்னகத்தே எப்பொழுதும் வைத்திருக்க வேண்டிய ரொக்கம், தங்கம், ஒப்புதல் பெற்ற பத்திரங்கள் உள்ளடக்கிய நீர்மைத் தன்மை கொண்ட சொத்துக்கள் ஆகும். |
| ரொக்க இருப்பு விகிதத்திற்கும் வணிக வங்கிகள் வழங்கும் கடன் அளவிற்கும் எதிர்மறைத் தொடர்பு உள்ளது. | இது கேட்பு வைப்பு மற்றும் கால வைப்பு போன்ற வங்கியின் பொறுப்புக்களின் ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவிற்கு இருக்க வேண்டும். |
| தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை |
| உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| சமனற்ற நிலை | சமநிலை |

5) வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறுக.

**பதில் :** 1. ஒரு குறுகிய அளவில் பார்க்கும் பொழுது, மைய வங்கியானது பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப்பெறுவதும் வெளிச்சந்தை நடவடிக்கைகள் எனப்படுகின்றது.
2. மைய வங்கி அரசின் கடன் பத்திரங்களை மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்களின் தகுதி படைத்த பத்திரங்களையும் விற்பனை செய்வதும், திரும்பப் பெறுவதும் ஆகும்.

6) கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?

**பதில் :** 1. வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்படுகிறது.
2. நாட்டின் பண அளிப்புச் சூழ்நிலைகளுக்கேற்ப அக்கடன் நோக்கங்களைப் பட்டியலிட்டு வரையறை செய்வதன் மூலம் கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவது ஆகும்.

7) வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகளைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து வேளாண் கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.
2. மைய அரசு, மாநில அரசு, மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் இதர வங்கி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.
3. ஊரகத் துறைக்குத் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைக் கடன் வழங்குவது மேலும் அவைகளை ஒருங்கிணைப்பது ஆகியவையாகும்.

8) கேட்பு வைப்பு என்றால் என்ன?

**பதில் :** வங்கிகளில் வைப்புக்களை வைத்து இருக்கும் வாடிக்கையாளர் முன்னறிவிப்பு இன்றி எப்பொழுது வேண்டுமானாலும் பணத்தை தனது கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். காசோலை (அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் எப்பொழுது தேவைப்படுகிறதோ அப்பொழுது எடுத்துக் கொள்ளலாம்.

9) மாறும் மூலதன சொத்து விகிதம் என் என்ன?

**பதில் :** இது வணிக வங்கிகள் தங்களது சொத்து மதிப்பில் எந்த அளவு மூலதனமாக வைத்துக் கொள்ளலாம் என்பதனை மைய வங்கி வரையறை செய்வது ஆகும்.

10) ஒருநாட்டின் நிதி சொத்துக் கையிருப்புக் கணக்கினை பட்டியலிடுக.

**பதில் :** கணக்கின் கீழ் தங்கத்தின் இருப்பு, எளிதாக மற்ற நாட்டு பணமாக மாற்றத்தக்க வெளிநாட்டு பணம் சிறப்புஎடுப்புரிமை பன்னாட்டு பண நிதியத்தின் நிகர கடன் பெறும் தகுதி நிலை ஆகியவை பதிவு செய்யப்படுகிறது.


**<u>3 மதிப்பெண் வினாக்கள்</u>** 10 x 3 = 30

11) வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக.

**பதில் :** 1. வங்கிகளின் கடன் உருவாக்கம் என்பது மிக முக்கியமான ஒரு செயல் ஆகும். வங்கிக் கடன் என்பது வாடிக்கையாளர்களின் வைப்புகளிலிருந்து, தேவைப்படுவோருக்கு அவர்களின் விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தத்தின் பேரில் கடனும் முன்பணமும் கொடுப்பது ஆகும்.
2. வங்கிகள் வழங்கும் கடன்கள் பொருளாதாரத்தில் நிகர பண அளிப்பினை அதிகப்படுத்தும்.
3. வணிக வங்கிகள் கேட்பு வைப்புகளின் அளவை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியும். அதிக அளவு கடன்களை அதிகரிக்க முடியும்.
4. வணிக வங்கிகள் தங்களின் கடன் அல்லது முன்பணம் அளிக்கும் முறை மூலமாக அல்லது சொத்துகளை வாங்கும் தன்மைகள் மூலமாகவும் தேவை வைப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ குறைக்கவோ முடிகிறது. இச்சக்தி வங்கிகள் வைப்புகளை புதிய வைப்புகளை உருவாக்குவதன் மூலம் ஏற்படுகிறது.

12) வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்புத் தருக.

**பதில் :**




1. ஒரு வங்கியல்லா நிதி நிறுவனம் அல்லது வங்கியல்லா நிதி நிறுமம் என்பது ஒரு நிதி நிறுவனம் ஆகும்.
2. அது முழு வங்கிக்கான உரிமம் கொண்டதும் அல்ல, மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதும் இல்லை.
3. வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் முழுமையான வங்கிப் பணிகளைச் செய்யாமல் மற்ற நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்கின்றன.
4. அவை வைப்புகளைப் பெற்றுக்கொண்டு கடன்களை வழங்குகின்றன.
5. மக்களின் சேமிப்பைத் திரட்டி முதலீட்டு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிக்கின்றன. அவை கடன் பெற்று கடன் வழங்குகின்றன.
6. அவை பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் செயல்படுகின்றன.
7. ஒரு வங்கியல்லா நிதி நிறுவனம் இருவகைப்படும். அவை, பங்குச்சந்தை மற்றும் இதர நிதி நிறுவனங்கள் ஆகும். (எ.கா.) நிதி நிறுவனங்கள், நிதி கழகங்கள்,சீட்டு நிறுவனங்கள். கட்டிட சங்கங்கள், முதல்நிலை பங்கு வெளியீட்டு நிறுவனங்கள், முதலீட்டு அமைப்புகள், யூனிட் டிரஸ்ட் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள்.

13) பண மதிப்பு குறைப்பு என்றால் என்ன?

**பதில் :** (i) ஒரு நாட்டின் மைய வங்கி அந்நாட்டின் பணத்தை மற்ற நாடுகளின் பண மதிப்பில் தானாக முன்வந்து குறைத்து நிர்ணயிப்பதே செலாவணி மதிப்பு குறைப்பு ஆகும்.

(ii) 1- ரூ.70 என்ற பண மாற்று வீதத்தை ரூ.1- ரூ.80 என்று குறைத்து, நிர்ணயிப்பதை செலாவணி மதிப்பு குறைப்பு எனலாம்.

(iii) அயல்நாட்டு செலுத்து நிலையில். சமமின்மை உள்ள நாடு தன் பணத்தின் மதிப்பை குறைத்து நிர்ணயித்து ஏற்றுமதிக்கு - ஊக்கம் கொடுத்து இறக்குமதிக்கான ஊக்கத்தை கெடுத்து செலுத்து சமமின்மையை சரிசெய்யலாம்.

(iv) செலாவணி மதிப்பு குறைப்பு ஏற்றுமதி பொருட்களை மலிவானதாகவும் இறக்குமதி பொருட்களை விலை உயர்ந்தவையாகவும் மாற்றும்.

(v) பணமதிப்பிறக்கம் இந்திய உணவு பொருட்கள் வெளிநாட்டினருக்கு மலிவும், இந்தியர்களுக்கு வெளிநாட்டு பொருட்கள் உயர்ந்த விலையிலும் கிடைக்க செய்கிறது.

14) நபார்டின் பணிகள் யாவை?

**பதில் :** 1. நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்திக்காகவும் முதலீட்டுக்காகவும், வேளாண்மை, சிறுதொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர ஊரக தொழில் நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்குகிறது.
2. இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றால் ஏற்பளிக்கப்பட்ட இதர நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகிய கால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.
3. கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும் பொருட்டு மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்ட கால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.
4. மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது வேளாண்மை, ஊரக வளர்ச்சி ஆகியவற்றிற்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களை பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்ட கால கடனை அளிக்கிறது.
5. மைய அரசு, மாநில அரசுகள், திட்டக்குழு, மைய, மாநில அரசுகளின் - சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர மிகச்சிறு தொழில்களுக்கு உதவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து வருகிறது.
6. நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள், துவக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியைச் செய்கிறது.
7. வேளாண்மைக்கும் ஊரக வளர்ச்சிக்குமான ஆய்வுகளை மேம்படுத்தும் விதமாக ஆய்வு மற்றும் வளர்ச்சி நிதியினை பராமரிக்கிறது.

15) இந்தியத் தொழில் நிதிக் கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.

**பதில் :** **இந்தியத் தொழில் நிதிக் கழகத்தின் பணிகளாவன:**
1. இந்திய ரூபாயிலும், வெளிநாட்டு பணத்தில் நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது.
2. வெளியிடப்பட்ட சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளிக்கிறது.
3. இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கும் இந்தியாவிலிருந்து வாங்கப்படும் தொழிற்துறை இயந்திரங்களுக்குமான பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கின்றது.
4. வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அந்நாட்டின் பணத்தில் வாங்கப்படும் கடன்களுக்கான உத்திரவாதத்தையும் அளிக்கிறது.

16) பண அங்காடியையும், மூலதன அங்காடியையும் வேறுபடுத்துக.

**பதில் :**

| | பணச்சந்தை | மூலதனச்சந்தை |
|---|---|---|
| 1 | அதிக நீர்மைத் தன்மையைக் கொண்டதும் குறுகிய காலத்தில், முதிர்ச்சியுறுவதுமான நிதிக்கருவிகளைக் கையாளும் அங்காடியே பண அங்காடி. | நீண்ட கால நிதிக் கருவிகளை வாணிபம் செய்யும் அங்காடி மூலதன அங்காடி |
| 2 | ஒருநாள் முதற்கொண்டு ஒரு ஆண்டிற்குள் முதிர்ச்சியடையும் நிதிக் கருவிகள் இவ்வங்காடியில் கையாளப்படுகின்றன. | உற்பத்தி நோக்கில் நிறுவனங்களும் அரசுக்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டும் இடமாகவும் மூலதன அங்காடி இருக்கிறது. |
| 3 | இங்கு கையாளப்படும் நிதிக்கருவிகள் அரசு பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், அழைப்புப் பணம், வைப்புச் சான்றுகள், வங்கியாளர் ஏற்புகள், மாற்றுச் சீட்டுகள், மறு வாங்கல் ஒப்பந்தங்கள், கருவூல உறுதிச் சீட்டுகள் அயல் நாட்டுச் செலாவணிகள் போன்றவை.. | மூலதன அங்காடியில் பயன்படுத்தப்படும் பாரம்பரியமான நிதிக்கருவிகள், கடன் பத்திரங்களும், சமபங்குகளும் ஆகும் . |

17) பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

**பதில் :** பணமதிப்பு நீக்கம் : பணமதிப்பு நீக்கம் என்பது அரசின் சட்டப்படியான பணத்தொகுப்பிலிருந்து குறிப்பிட்ட அலகிலான பணத்தின் மதிப்பைச் செல்லாது என அறிவிக்கும் செயலாகும்.

பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்கள் :

1. கருப்புப் பணத்தை ஒழிப்பது.
2. இலஞ்சத்தைத் தடுப்பது.
3. தீவிரவாதத்திற்குப் பணம் செல்வதை தடுப்பது
4. கள்ளப் பணத்தைத் தடுப்பது ஆகியன.

18) வட்டார ஊரக வங்கி பற்றி எழுது?

**பதில் :** 1. இது 1975-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் கிராமப்புறங்களில் வசிக்கும் விவசாயிகளை தொடர் கடன் சூழலில் இருந்து மீட்பதாகும். சிறு, குறு விவசாயிகள் நிலமற்ற விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் ஊரக பகுதியில் விவசாயம், வர்த்தகம் மற்றும் இதர உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதாகும்.

2. மேலும், இந்த வங்கிக்கு, வணிக வங்கிகள் கடன் தொகை, மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சியும் வழங்குகிறது.

3. இந்திய ரிசர்வ் வங்கியும், வட்டார ஊரக வங்கிக்கு நபார்டு வங்கி மூலம் மறுகடன்களையும் வழங்கி அதன் வளர்ச்சிக்கு உதவுகிறது.

19) ரெப்போ விகிதம்,மீள் ரெப்போ விகிதம் வேறுபடுத்துக.

**பதில் :**

| ரெப்போ விகிதம் (RR) | மீள் ரெப்போ விகிதம் (RRR) |
|---|---|
| வணிக வங்கிகளுக்கு மைய வங்கி குறுகிய கால கடன் வழங்கும் பொழுது விதிக்கும் வட்டி. | வணிக வங்கிகளிடமிருந்து வாங்கும் கடனுக்காக RBI கொடுக்க விரும்பும் வட்டி. |
| இவ்வங்கிகளுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும் பொழுது அவைகள் பத்திரங்களை ஈடாக வைத்து இந்திய ரிசர்வ் வங்கியில் கடன்களை பெறும். | இதை உயர்த்தினால், வணிக வங்கிகள் அவைகளிடம் உள்ள பணத்தை ரிசர்வ் வங்கியிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. |
| பண வீக்கத்தை கட்டுப்படுத்த ரெப்போ விகிதத்தை அதிகரிப்பதன் மூலம் கடன் வாங்குவதற்கான செலவை அதிகப்படுத்தி கடன் வாங்குவதை குறைக்கிறது. | இதனால் அந்த பணத்திற்கு உயர் பாதுகாப்பு கிடைக்கிறது.வணிக வங்கிகள் தனது வாடிக்கையாளருக்கு கடன் கொடுப்பது குறைகிறது.ஆகவே வாடிக்கையாளருக்கு வட்டி உயருகிறது. |

20) மைய வங்கியின் தோற்ற வரலாற்றை எழுதுக.

**பதில் :** (i) 1656 ல் நிறுவப்பட்ட ஒரு தனியார் தோன்றியதுதான் வங்கியிலிருந்து உலகின் முதல் மைய வங்கியான ஸ்வீடன் நாட்டு ரிக்ஸ் வங்கி.

(ii) இம்மைய வங்கி 1897 ஆம் ஆண்டு பணத்தை வெளியிட முழு உரிமை பெற்றது.

ஆனால் வங்கிக் கலையின் அடிப்படையில் 1864ல் தோற்றுவிக்கப்பட்டு பணத்தை வெளியிட்ட முதல் மைய வங்கி இங்கிலாந்து வங்கி.

(iii) 1920 ஆம் ஆண்டு பிரஸ்ஸல்ஸ் நகரில் கூட்டப்பட்ட பன்னாட்டு நிதி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் படி 1921 முதல் 1954 ஆம் ஆண்டுவரையான காலகட்டத்தில் பெரும்பாலான நாடுகளில் வங்கி தோற்றுவிக்கப்பட்டன.

(iv) தென் ஆப்பிரிக்க ரிசர்வ் வங்கி (1921). சீன மைய வங்கி (1928); நியூசிலாந்து ரிசர்வ் வங்கி (1934); இந்திய ரிசர்வ் வங்கி (1934); சிலோன் மைய வங்கி (1950); இஸ்ரேல் மைய வங்கி (1954) .

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 5 x 5 = 25

21) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

**பதில் : மூலதனத் திரட்சி :**

1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்சிக்கு இன்றியமையாததான மூலதன திரட்சியில் வங்கிகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன

2. வணிக வங்கியானது தனது வங்கிப் பிரிவுகளின் கீழ் பரவலாகச் செயல்பட்டு பொதுமக்களின் சேமிப்பை வைப்புகளாகத் திரட்டி அவற்றை உற்பத்தி நோக்கத்திற்காக கடன்களாக வழங்குகின்றன.

**கடன் உருவாக்கம் :**

1. வங்கிகளின் கடன் உருவாக்கம் மூலம் முன்னேற்றத் திட்டங்களுக்கு அதிக நிதியைப் பெற்றுத் தருகிறது.

2. இதன்மூலம் உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம், விற்பனை ஆகியவை ஏற்றம் பெற்று விரைவான பொருளாதார வளர்ச்சியை கொண்டு வருகின்றன.

**அதிக உற்பத்தித்திறனை கொண்ட முதலீட்டை நோக்கி பணத்தை முறைப் படுத்துதல் :**

1. வங்கிகள் உற்பத்தி நோக்கில் பணத்தை முதலீடு செய்கின்றன.

2. ஒரு துறையில் செய்யப்பட்ட முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தால் அத்துறைக்கு வழங்கப்படும் முதலீட்டுக் கடனைக் குறைத்துக்கொண்டு, அதிக உற்பத்தித்திறன் கொண்ட துறைகளுக்குக் கூடுதலாக முதலீட்டுக்கான கடனை மடைமாற்றம் செய்கிறது.

**சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்:**

1. வங்கிகள் சரியான தொழிலையும், சரியான நபர்களையும் தெரிந்தெடுத்துக் கடன் வழங்குவதால் தொழிற்பெருக்கம் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உதவுகின்றன.

2. எந்த பொருளுக்கு அதிக தேவை உள்ளதோ அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு கடன்களையும், முன் பணங்களையும் வழங்குகிறது.

**கடனைப் பணமாக்குதல் :**

வணிகத்தில் எழும் குறிப்பிட்ட காலக் கடன்களை இடையிலேயே ரொக்கமாக்கித் தருவதன் மூலம் உற்பத்தியிலும், வணிக நடவடிக்கைகளிலும் சுணக்கம் ஏற்படாமல் வணிக வங்கிகள் பாதுகாக்கிறது.


**வேலைவாய்ப்பினை உருவாக்குதல் :**

1. வங்கிகள் தேசியமயமாக்கலுக்குப் பின் வங்கித்துறை பெருமளவுக்கு வளர்ந்துள்ளது.

2. நிறைய எண்ணிக்கையில் கிளைகள் திறக்கப்பட்டு கடன் பெருக்கம் செய்வதால் வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.

22) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக

**பதில் :** வணிக வங்கிகள் இலாப நோக்கம் உடையவை. அவைகள் வைப்புகளைப் பெற்று முதலீட்டுக்கான கடன்களை அளிக்கின்றன.




**வணிக வங்கியின் பணிகள்**

**முதன்மைப் பணிகள்:**

வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்: பொதுமக்களால் செலுத்தப்படும் வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆகும். இது வங்கி வணிகத்திற்கான முக்கிய நிதியாதாரம் ஆகும். பொது வைப்புகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

கேட்பு வைப்புகள் : இவை வங்கிகளில் வைப்புகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர் முன்னறிவிப்பின்றி எப்பொழுது வேண்டுமானாலும் பணத்தைத் தனது கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும் ஒரு வைப்பாகும்.

கால வைப்புகள் : இவை ஒரு குறிப்பிட்ட காலவரையறை வரை வங்கிகளிடமிருந்து மீளப் பெறப்படாமல் இருக்கும் வைப்புகளாகும். (எ.கா.) நிலை வைப்பு (Fixed Deposit), தொடர் (Recurring Deposit).

கடன் வழங்குதல் :

வணிக வங்கிகள் ரொக்கக் கடன், மாற்றுச் சீட்டு தள்ளுபடி, மிகைப்பற்று ஆகிய முறைகளில் கடன்களை வழங்குகின்றன.

**இரண்டாம் நிலைப் பணிகள் :**

முகமைப் பணிகள்: வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக இருந்து செய்யும் பணிகள் முகமைப்பணிகள் எனப்படுகின்றன.

காசோலைகளைப் பணமாக்குதல்: தன் வாடிக்கையாளர்களுக்காக அவர்களுக்கு வரும் காசோலைகள், மாற்றுச்சீட்டுகள் ஆகியவற்றை வங்கிகள் தீர்வகத்தின் மூலம் வசூல் செய்து கொடுக்கின்றன.

வருமானத்தைப் பெறுதல் : வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வரவேண்டிய இலாப ஈவு, ஓய்வூதியம், சம்பளம், வாடகை, வட்டி ஆகியவற்றினை வசூலித்துத் தருகின்றன.

செலவுகளைச் செலுத்துகிறது: தொலைபேசிக் கட்டணம், காப்பீட்டு பிரிமியம், கல்விக் கட்டணம், வாடகை செலுத்துதல் முதலானவற்றை வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களுக்காக செய்கிறது.

பொதுப் பயன்பாட்டுப் பணிகள் :

இது வங்கிகள் தன் வாடிக்கையாளர்களுக்காக சில கூடுதல் பயன்பாடுகளை உருவாக்கும் நோக்கில் செய்யும் பணிகளைப் பொதுப் பயன்பாட்டு பணிகள் என்கிறோம்.

பாதுகாப்புப் பெட்டக வசதி : நகைகள், பங்குகள், கடன் பத்திரங்கள் முதலான மதிப்புமிக்க பண்டங்களை பாதுகாக்க, பெட்டக வசதியை வணிக வங்கிகள் தருகின்றன.

பயணக் காசோலைகளை வழங்குதல்: பயணக் காசோலைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டுப் பயணத்தின் போது பணப்பாதுகாப்பினை வழங்குகிறது.

அயல்நாட்டுச் செலாவணியைக் கையாளுதல்: ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபடும் வணிகர்களுக்கு வணிக வங்கிகள் அயல்நாட்டுச் செலாவணி வசதியைச் செய்து தருகின்றன.

நிதிமாற்றுதல்: ஒரு வங்கியிலிருந்து மற்ற வங்கிக்கு நிதியை மாற்றுவதாகும். வரைவு காசோலைகள், தொலைபேசி மற்றும் மின்னணு பரிமாற்றங்கள் மூலம் நிதி மாற்றப்படுகிறது.

கடன் உறுதியளிப்புக் கடிதம்: வாடிக்கையாளரின் கடன் நம்பகத்தன்மையைச் சான்றளிக்கும் விதமாக வணிக வங்கிகள் கடன் உறுதியளிப்பு கடிதங்களை வழங்குகின்றன.

**இதர பணிகள் :**

பண அளிப்பு : வணிக வங்கியின் முக்கியமான பணிகளில் ஒன்று பணப்புழக்க வேகத்தை அதிகரிப்பதன் மூலம் பண அளிப்பை அதிகரித்தல் ஆகும்.

கடன் உருவாக்கம் : கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல்.

புள்ளி விவரங்களை திரட்டுதல் : இந்திய ரிசர்வ் வங்கியை முதலான வணிக வங்கிகளும் வணிகம், தொழில், வேளாண்மை, நிதி முதலான அடிப்படைத் துறைகளின் புள்ளிவிவரங்களை வெளியிடுகின்றன.

23) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

**பதில் :** ஒவ்வொரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டின் தலைமை வங்கியாகும். இந்தியாவின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி என அழைக்கப்படுகிறது. 1935ஆம் ஆண்டு முதல் ரிசர்வ் வங்கி தனது பணியினைத் துவங்கியது.

**ரிசர்வ் வங்கியின் பணிகளாவன :**

பண அதிகார அமைப்பு : இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அயல்நாட்டு செலாவணி பரிமாற்ற விகிதத்தினை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்துநிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பண வீக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் வங்கி அமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது.

காகிதப் பண வெளியீடு : காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமைப் பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும்.

வங்கி உரிமங்கள் வழங்குபவர் : வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம், பிரிவு 22இன் படி ஒவ்வொரு வணிக வங்கியும் இந்தியாவில் வங்கித்தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும். இப்பணியையும் ரிசர்வ் வங்கி செய்கின்றது.

அரசுக்கான வங்கி : இது மத்திய, மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும். அரசுகளுக்கு குறுகியகாலக் கடன்கள், கடன் தொடர்பான சேவைகள், அரசின் கடன் பத்திரங்களை உருவாக்கி விற்பனை செய்வது மேலும் வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது போன்ற பணிகளைச் செய்கிறது.

வங்கிகளின் வங்கி : இது அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும். வங்கிகளின் வைப்புகளை ஏற்று, மாற்று சீட்டுகளை மறு தள்ளுபடி செய்வதால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.

கடை நிலைக்கடன் ஈவோன் : வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிக்கல்கள் ஏற்படும் பொழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில் அச்சிக்கலில் இருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

தீர்வாக செயல்படுகிறது : வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிமாற்றங்களை தனது 14 தீர்வகங்களைக் கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி சமன் செய்கின்றது. பரிமாற்றக் கருவிகளைப் பரிமாறிக் கொள்ள உதவுவதுடன், பரிமாற்றம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

24) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.

**பதில் :** பணவியல் கொள்கையானது பொருளாதாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த ஒரு கருவியாகும்.

பணத்தின் நடுநிலைத் தன்மை :

பொருளியலாளர்களான விக்ஸ்டெட், ஹேயக் மற்றும் ராபர்ட்சன் ஆகியோர் பணத்தின் நடுநிலை பற்றி விவரித்த முக்கிய நிபுணர்கள் ஆவார்கள்.

பணத்தில் ஏற்படும் மாற்றமே அனைத்து பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் அடிப்படைக் காரணம் ஆகும்.

பண நடுநிலையாளர்களின் கூற்றுப்படி, பணவியல் மாற்றங்கள் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கும் நாட்டின் பொருளாதார அமைப்பில் விலகலையும், இடையூறுகளையும் ஏற்படுத்தும் என்றனர்.

பரிமாற்றவீத நிலைத்தன்மை :

பரிமாற்றவீத நிலைத்தன்மை என்பது பணவியல் கொள்கையின் பாரம்பரியமான நோக்கமாகும்.

எப்பொழுது ஒரு நாட்டின் அயல்நாட்டு வணிகச் செலுத்துச் சமநிலையில் சமனற்ற நிலை தோன்றுகிறதோ அப்பொழுது தங்கநகர்வின் காரணமாக அது தானாகவே சரி செய்து கொள்ளும்.

எப்பொழுது தங்கம் உள்வருகிறதோ அப்பொழுது 'பணமும் கடனும் சுருங்குகிறது.

செலுத்துச் சமநிலையில் ஏற்படும் சமனற்ற நிலைகள் தானாகவே சரி செய்யப்பட்டுப் பரிமாற்ற விகிதத்தில் நிலைத்தன்மை பேணப்படும்.

விலை நிலைத்தன்மை :

பொருளியலாளர்கள் காஸல், கீன்சு முதலானவர்கள் விலை நிலைத்தன்மை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையில் முக்கியமான நோக்கமாகும் என்கின்றனர்.

இது வணிக நடவடிக்கையை அதிகரித்து ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

விலை நிலைத்தன்மை என்பது விலை மாறாமல் நிலையாக இருப்பதோ, விலைத் தேக்கமடைந்து இருப்பதோ அல்ல. ஒரு மிதமான விலையேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும்.

முழுவேலை வாய்ப்பு :

உலகப் பெருமந்தத்தின் பொழுது, வேலைவாய்ப்பின்மை மிக வேகமாக அதிகரித்தது.

முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

மேலும் 1936-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணத்திற்கான பொதுக் கோட்பாடு" (General Theory of Employment, Interest and Money) எனும் கீன்சின் நூல் முழுவேலைவாய்ப்பு எனும் பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது.

பொருளாதார வளர்ச்சி:

பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகாலத்தில் உண்மை தலா வருவாய் அதிகரித்து செல்லும் நடவடிக்கை ஆகும். ஆகவே, சமநிலை பண அளவு, உற்பத்தி அளவுகள், சாதகமான சேமிப்பு - முதலீடு ஆகிய சூழ்நிலைகளைப் பராமரித்து அதன் மூலம் நீடித்தப் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாக அமைகிறது.

அயல்நாட்டு செலுத்துச் சமநிலையில் சமநிலையைப் பேணுதல் :

செலுத்துச் சமநிலையில், சமநிலையைப் பேணுதல் என்பது பணவியல் கொள்கையின் அடுத்தக் குறிக்கோளாகும். உலக வணிகம் சமனற்ற நிலையில் அதிகரித்ததால் வரும் அயல்நாட்டு செலாவணி சிக்கலாகும். இதன் காரணமாக செலுத்து சமநிலையில் வரும் பற்றாக்குறை பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதின் திறனையும் குறைக்கும்.

25) அயல் நாட்டு செலுத்து சமமின்மையை நீக்கு முறைகளை தொடர் வரைபடம் மூலம் காட்டுக .

**பதில் :**

